# பத்திரிக்கை செய்தி

## ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருடன் இணைந்து இளநிலை பொறியாளர் அலுவலகம், பொறியாளர் பிரிவு, மத்திய மண்டலம், கோயமுத்தூர் மாநகராட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை

இளநிலை பொறியாளர் அலுவலகம், பொறியாளர் பிரிவு, மத்திய சரகம், கோயமுத்தூர் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் கையூட்டாக தரகர்களிடம் பணம் பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் இன்று 10.09.2024ம் தேதி மாலை இளநிலை பொறியாளர் அலுவலகம், பொறியாளர் பிரிவு, மத்திய சரகம், கோயமுத்தூர் மாநகராட்சி அலுவலகத்தில் கோயமுத்தூர் பிரிவு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருடன் இணைந்து திடீர் சோதனை நடத்தப்பட்டது. சோதனையில் கணக்கில் வராத ரொக்கம் ரூ.1,02,100/- திரு.விமல்ராஜ், இளநிலை பொறியாளர், பொறியாளர் பிரிவு, மத்திய சரகம், கோயமுத்தூர் மாநகராட்சி, அவர்களின் கணிணி பையிலிருந்து கைப்பற்றப்பட்டது.